பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 67

24.08.2026

லஞ்சம் கேட்டு பெற்ற உதவி செயற் பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் கைது

புகார்தாரர் திரு.அபினேஷ், அன்னை நகர், வேளாங்கண்ணியில் ஒரு இடம் வாங்கியுள்ளார், இந்த இடத்தில் ஒரு லாட்ஜ் கட்டிக்கொண்டிருக்கிறார். புகார்தாரரின் நிலத்திற்கும் பிரதான சாலைக்கும் இடையே ஒரு கால்வாய் செல்கிறது. புகார்தாரர் தனது சொந்த செலவில் தனது நிலத்தையும் பிரதான சாலையையும் இணைக்கும் வகையில் கால்வாயின் குறுக்கே சிறிய பாலம் அமைப்பதற்காக தடையின்மைச் சான்றிதழ் வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து தடையின்மை சான்றிதழ் வழங்க திரு.மாணிக்கவேல், உதவி செயற் பொறியாளர், நீர்வள மேலாண்மைத்துறை, பொதுப்பணித்துறை, துணைக்கோட்ட அலுவலகம், திருவாரூர் மற்றும் திரு.வினோத், உதவி பொறியாளர், நீர்வள மேலாண்மைத்துறை, பொதுப்பணித்துறை, துணைக்கோட்ட அலுவலகம், திருவாரூர் ஆகியோர்கள் தங்களுக்கு ரூ.3,00,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருவாரூர் பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 24.08.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.மாணிக்கவேல், உதவி செயற் பொறியாளர், மற்றும் திரு.வினோத், உதவி பொறியாளர் ஆகியோர்கள் ரூ.3,00,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

PRESS RELEASE – 67
24.08.2026

ASSISTANT EXECUTIVE ENGINEER AND ASSISTANT ENGINEER ARRESTED FOR BRIBE

The complainant, Tr. Abinesh, purchased a land at Annai Nagar Pradhamaramapuram Village, Velankanni and constructing a lodge at his site. A canal is crossing over between his site and main road, and he had applied for No Objection Certificate for constructing a small over bridge between his site and main road at his own cost. Tr.Manickavel, AEE, Sub Division Office, Water Resources Management Department, PWD, Thiruvarur and Tr.Vinoth, AE, Sub Division Office, Water Resources Management Department, PWD, Thiruvarur demanded a bribe of Rs.3,00,000/- from the complainant for issuing NOC. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Thiruvarur detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (24.08.2026). During trap proceedings, Tr.Manickavel, AEE, and Tr.Vinoth, AE, received the bribe amount of Rs.3,00,000/- from the complainant. The both officials were arrested and remanded.